**வாராக் கடன்களுக்கு ஒரு தடவை ஒப்பந்தம் மூலம்**
**<u>திர்வு – ரூ.25,000/-க்குப்பட்ட சிறு கடன்கள்</u>**

BP.BC.53/21.04.115 / 2001-02 டிசம்பர் 22, 2001

அனைத்து பொதுத்துறை வங்கிகளின்
தலைவர்கள் மற்றும் நிர்வாகஇயக்குநர்கள்

அன்புடையிர்,

**வருமானம் ஈட்டா செயலற்றச் சொத்துக்கள்**
**(வாராக் கடன்கள்) மீது ஒரு தடவை ஒப்பந்தத்**
**<u>தீர்வு – ரூ.25,000/- க்குட்பட்ட சிறு கடன்</u>**

புதுதில்லியில் 2001 நவம்பர் 12ஆம் தேதி நடைபெற்ற பொதுத்துறை வங்கிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் கூட்டத்தில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள், ரூ.25,000/- க்குப்பட்ட நிலுவையில் இருக்கும் கடன்களை வசூலிப்பது தொடர்பாக தகுந்த ஒரு திட்டத்தை வங்கிகள் உருவாக்கிட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். கீழே கண்டுள்ள விதிமுறைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பொதுத்துறை வங்கிகளுக்கான குழுமம் அதற்கான கொள்கையை வகுக்கலாம்.

<u>2(i) பொருந்தும் தன்மை</u> :
(a) 1998 மார்ச் 31 அன்று வட்டி நீங்களாக அசல் மட்டும் ரூ.25,000/- வரை நிலுவையில் உள்ள வாராக் கடன்களுக்கு, அக்கடனகள் எதற்காக வாங்கப்பட்டிருந் தாலும் இந்த வழிமுறைகள் பொருந்தும்.
(b) கடன்கள் மீதான வழக்குகள் நீதிமன்றத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தாலும், அல்லது வழிமுறைகள் / வழிகாட்டிகள் பொருந்தும்.
(c) ஆனால் மோசடி வழக்குகளிலும், வேண்டுமென்றே கடனை திருப்பிச் செலுத்தாதவர்களுக்கும் இது பொருந்தாது.

(d) 2002 ஜூன் 30 முடியத்தாள் இந்த வழிகாட்டுதல்கள் பொருந்தும்.
(ii) <u>தீர்வுக்கான வழிமுறை – தொகையும் குறிப்பிட்ட தேதியும் :</u>
1998 மார்ச் 31 அன்று நிலுவையில் உள்ள கடனில் அசலுக்குரிய தொகையை மட்டுமே திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை என்று கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். மேற்படி தேதியில் நிலுவையில் உள்ள தொகையில் சேர்ந் திருக்கும் வட்டி அல்லது கொடுபட வேண்டிய வட்டி வசூலிக்கப்படாமல் ரத்து செய்யப்படும்.

(iii) கொடுப்பு :

மேலே கூறியவாறு செலுத்தப்படவேண்டிய தொகையை முடிவு செய்த பின்னர், சாதாரணமாக அது ஒரு தடவையியே கொடுக்கப்பட வேண்டும். ஆயினும் தகுதியின் அடிப்படையில் 25% முதலில் செலுத்தி என்ஜியவற்றை தவணை முறையிலும் செலுத்த வங்கிள் தீர்மானிக்கலாம். தீர்மானிக்கப்பட்ட தேதியறிந்து ஒரு வருட காலத்திற்குள் தவணைகளாகச் செலுத்தவேண்டும்.

(iv) முடிவு எடுக்கும் அதிகாரம் :

இந் த ஒப்பந் தத் திர்வுக்கான் முடிவினை எடுக்கும் அதிகாரம் அந்த அந்த வங்கிக்கிளை மேலாளருக்கே அளிக்கப்படுகிறது. ஆனால் சம்பந் தப்பட்ட கடனே கிளைமேலாளரால் அளிக்கப்பட்ட தொனில், அவருக்கு அடுத்த மேலதிகாரி ஒப்பந் தத்தீர்வுக்கான முடிவை எடுக்கும் அதிகாரம் உடையவராகிறார்.

(v) பாகுபாடின்மை :

மேலே சொல்லப்பட்ட வழிமுறைகள் அனைத்தும் அனைத்து செயலற்ற சொத்துக்களுக்கும், எந்த விதப் பாகுபாடுமின்றி பொருந்தும்.

(vi) கொள்கை வகுப்பது :

செயலற்ற சொத்துக்கள் மீது எடுக்கப்படும் இந்த ஒப்பந் தத் தீர்வுக்கான் வழி முறைகளை கொள்கையாக வங்கிகளின் இயக்குநர் குழு குடிவெடுத்துச் செயல்பட வேண்டும்.

(vii) விளம்பரம் :

தகுதி வாய்ந்த கடன் திருப்பிச் செலுத்தாதவர் அனைவருக்கும் இது பற்றிய தகவல் கொடுக்கப்பட்டு, ஒருதடவை ஒப்பந் தத்தீர்வு முலம் கடன் அடைய வழி வகை செய்ய அறிவுறுத்த வேண்டும்.

(viii) குழுமத்தின் பரிசீலனை :

ஒரு தடவை ஒப்பந்தத் தீர்வு முறையின் அமலாக்கம் முன்னேற்றங்கள் மாதா மாதம் அட்டவனையாக அடுத்த மேல் அலுவலகத்திற்கு அல்லது தலைமை அலுவலக்த்திற்கு அனைத்து கிளைகளுக்கும் அனுப்பவேண்டும். மாதா மாதம் இந்த ஒப்பந்த தீர்வை இயக்குநர் குழு பரிசீலனை செய்திடல் வேண்டும்.

அன்புடன்

M.R. சினிவாசன்

தலைமைப்பொது மேலாளர் பொறுப்பு